Arrack distilleries in Tamil Nadu

* 85. Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up arrack distilleries in the Co-operative sector in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ & இ) முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முனுசாமி அவர்களைப் பாராட்டுகிறேன். கேள்வி அனுமதிக்கலாம் என்றாலும் அவர்கள் கேள்வி கேட்கவில்லை. அப்படி உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் தான் பல கேள்விகள் அமைய முடியும்.

Tamil Nadu Cements, Alangulam

* 86 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that tender has been called for the supply of about 510 MT of Hyper Steel Grinding Balls and Chilled cast iron cylpets by the General Manager of Tamil Nadu Cements, Alangulam by the 1st week of August, 1971; and

(b) if so, to whom the supply was allotted?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) முடிவு எடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE: Sir, may I know how many persons applied for tenders and what are the norms by which the tender will be properly investigated and final allotment made?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: யார் யார் இதற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. நம்முடைய அரசுக்கு வந்த தகவலின்படி இன்னும் இதுபற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படவில்லை. பரிசீலிப்பதற்கு முன் இந்தப் பொருள்களால் இந்த ஆலைக்குப் பயன் இருக்குமா, இந்தப் பொருள்களை மற்ற ஆலைகள், சிமெண்ட் ஆலைகள் எப்படிப் பயன்படுத்துகின்றன என்பதையெல்லாம் கவனமாக எடுத்துக் கொண்டு முடிவு எடுக்க வேண்டுமென்று அரசு ஆலோசனை கூறியுள்ளது.

Fertilizer plant at Tuticorin

* 87 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Fertilizer Plant at Tuticorin is proposed under Joint Sector; and

(b) if so, the share of the private industrialist and nature of control?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 71 கோடியில் தனிப்பட்ட தொழில் அதிபர் திரு. எம். ஏ. சிதம்பரம் என்பவரும் தொழில் நிர்வாகக் குழு உட்பட பங்கு விற்பனை செய்வதில் அவருடைய குழுவினரும் ரூ. 4.6 கோடி பங்கு மூலதனம் செலுத்துவர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தனி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிறுவன நடவடிக்கைகளின் நிர்வாகம் நிறுவன இயக்குநர் வாரியத்தின் பொறுப்பிலிருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நிர்வாகப் பொறுப்பு அரசின் ஏகப் பொறுப்பாக இருக்கிறதா? அல்லது எம்.சி.டி. அவர்களுக்கும் பங்கிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முதலிலேயே கூட்டுத் துறை என்று சொன்னேன். பலமுறை இங்கு விளக்கப் பட்டிருக்கிறது. நான் முன்பு கூறியதைப்போன்று மொத்தம் 17 கோடி ரூபாயில் ஈக்விட்டி பங்கைப் பொறுத்த அளவில் நம் அரசு, வாரியம் 4 கோடியே 42 இலட்சம் ரூபாயும், தனியார் சேர்ந்து 4 கோடியே 60 இலட்சம் ரூபாயும், மத்திய அரசாங்கத்தின் ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்டியூஷன் இவைகளெல்லாம் சேர்ந்து 7 கோடியே 98 இலட்சம் ரூபாயும் போடப்பட்டிருக்கிறது. நிர்வாகம் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய அரசு வாரியத்தின் சார்பில் 4 பேரும், தனியார் பங்குகளுக்காக 4 பேரும், புரொஃபஷனல் மேனேஜ்மெண்ட் குரூப் என்று 3 பேரும், மத்திய அரசாங்கத்தினுடைய ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் மூலம் 5 பேரும் இதிலே போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் சார்பில் 5 பேரும், மாநில அரசாங்கத்தின் சார்பில் 4 பேரும் இருக்கிறார்கள். பொதுத்துறை தனியாருக்காக பல முறைகளில் 7 பேர் வரையில் கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் அந்த போர்ட் ஆஃப் டைரக்டர்ஸின் சேர்மனாக யாராவது இருக்க வேண்டுமென்று நிர்ணயம் உண்டா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : போர்ட் என்று போட்டால் சேர்மன் போட வேண்டும். இப்பொழுது திரு. சிதம்பரம் அவர்கள் அதனுடைய தலைவராகப் பணியாற்றுகிறார்கள்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that a sum of Rs. 4 crores is being given by this management. May I know whether this Government is aware that all this amount is not given by management alone but by other agencies of Government like so many other Financial Corporations. Is the entire money given by this private management or other amounts given by some other financial corporations also which are financial institutions? I want to know the exact position. May I know all the details?

1972 சனவரி 28]

மாண்புமிகு திரு செ. மாதவன்: ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் பொறுத்தவரை மத்திய அரசு, மாநில அரசு பற்றித் தனியாகப் புள்ளிவிவரம் சொன்னேன். 7 கோடி 98 லட்சம். 4 கோடி 60 லட்சம் பொறுத்தவரை குறிப்பிட்ட பிரச்சினை இதுதான். Group comprising Chairman, Vice Chairman, other private Directors of the company, professional management associates, relations, friends, companies and farmers. இவர்களும் சேர்ந்துதான் 4 கோடி 60 லட்சம். கேள்வியினுடைய சந்தேகம் மாநில அரசு மத்திய அரசு நடத்துகின்ற ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் மூலமாக இவர்கள் பணம் போட்டு தங்களுடைய பங்காக வைத்திருப்பதா என்பது. தவறான ஊகம் அது. மூன்றாவது ஐட்டமாகச் சொன்னார்கள்— funds by way of fixed capital or underwriting by financial institutions and brokers, as organised by financial institutions, banks. இது 7 கோடி 98 லட்சம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான்கு கோடி மூலதனம் போட்ட தனியார் துறையைச் சேர்ந்த சிதம்பரம் ஏன் சேர்மனாக இருக்க வேண்டும்? அரசாங்கம் அதிகப் பணம் போட்டிருக்கும் போது அரசாங்கத்தின் சார்பில் ஏன் சேர்மனைப் போட முன்வரக்கூடாது? இப்போது இருக்கும் சேர்மன் ஆண்டுக்கு ஒருமுறை மாற்றப்படுவாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: போர்டு ஆப் டைரக்டர்ஸ் கூடித்தான் தலைவரைப் பற்றி முடிவு எடுப்பார்கள். தனியார் ஒருவர் தங்களுடைய ஆற்றலாலே ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். அவர்கள் 4 கோடி 60 லட்சம் போட்டாலும் அவர்கள் சார்பில் நான்கு இயக்குநர்கள்தான். நாம் அவர்களை விடக் குறைவாக, 4 கோடி 42 லட்சம் அளவுக்குப் போட்டிருந்தபோதிலும் நம்முடைய சார்பிலும் 4 டைரக்டர்கள் இருக்கிறார்கள். இதிலே மத்திய அரசாங்க இயக்குநர்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அரசாங்கத்தை மீறி எதுவும் நடந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது அரசின் கருத்தாகும்.

* 88 **வினா.—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அமைக்கப்பட இருக்கும் உர ஆலை அதன் அருகே அமைக்கப்பட இருக்கும் கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து இருக்க வேண்டுமென்று மத்திய அரசு நிபந்தனை விதித்துள்ளதா?

(இ) ஆம் எனில், நிபந்தனைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.